## 26

# புயலுக்கு மேலாக உயருதல்

## (7:9-17)

*விமானம் கிளம்பத் தொடங்கியதும், நான் படபடப்பானேன். மழைபெய்து கொண்டிருந்தது; காற்று அடித்துக் கொண்டிருந்தது; மேல்மூடிய மேகம் இருளாகவும் தீமைவிளைவிக்கக் கூடியதாகவும் இருந்தது. மழைத்தாரை வடிந்த ஜன்னல் வழியாக நான், வெளியே உற்றுப்பார்த்தபோது, இந்த விமானப் பயணம் ஏன் இரத்து செய்யப்படவில்லை அல்லது குறைந்த பட்சம் இது ஏன் தாமதமாக்கப்படவில்லை என்று வியப்படைந்தேன். நாங்கள் மேல்நோக்கிப் பறந்தபோது, கொந்தளிக்கும் காற்று விமானி அறையை அலைக்கழித்தது. விமானப்பயண வியாதிச் சிகிச்சைப் பையொன்று என் அருகில் உள்ளதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நான் சோதித்துப் பார்த்துக்கொண்டேன். பற்கடிக்கச்செய்யும் அதிர்வுகளுடனான பலநிமிடங்களுக்குப் பின்பு, விமானம் இருளில் இருந்து சூரிய வெளிச்சத்திற்குக் கடந்து சென்றது. கீழே இருந்த மேகங்கள், விளையாட்டு நிறைந்த கையினால் குவிக்கப்பட்ட பெரிய அளவிலான பஞ்சுப் பந்துகள்போல் வெண்மையாகப் பிரகாசித்தன. இப்போது விமானம் சொகுசாகச் சென்றது. நாங்கள் புயலுக்கு மேலாக உயர்ந்திருந்தோம்.*

நமது முந்திய பாடமானது, வரவிருந்த புயலுக்குத் தேவனுடைய ஊழியக்காரர்களைத் தயார் செய்விப்பதற்காக அவர்களுக்கு முத்திரையிடப்படுதலைச் சித்தரித்தது. இந்தப் பாடத்தில் நாம், அவர்களைப் புயலுக்குப் *பின்பு* தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கக் காண்போம்.

அதிகாரம் 7ன் முதல் காட்சியில் நாம், பூமியின்மீது "சபை என்ற இராணுவசேனையை"[1] கொண்டுள்ளோம்; கடைசிக்காட்சியில் நாம், பரலோகத்தில்[2] "சபையின் வெற்றியை"[3] கொண்டுள்ளோம். இவற்றில் முதலாவது, கிறிஸ்தவர்கள் மீட்கப்படுதலைச் சித்தரிக்கிறது; இரண்டாவது, கிறிஸ்தவர்கள் பலன் அளிக்கப்படுதலைச் சித்திரிக்கிறது. வசனங்கள் 1முதல் 8வரையுள்ள பகுதியானது தற்போதய பாதுகாப்பில் மையங்கொண்டிருக்கையில், வசனங்கள் 9முதல் 17வரையுள்ள பகுதியானது நிறைவான இரட்சிப்பைக் கொண்டாடுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17ஐ, "பரலோகத்தின் நிலை பற்றி, வேதவசனத்தில் எங்கும் காணப்படுபவற்றிலேயே மிகவும் உயர்த்தப்பட்ட சித்தரிப்புகளில் ஒன்று" என்று இராபர்ட் மவுன்ஸ் அவர்கள் அழைத்தார்.[4] மெரில் C. டென்னீ அவர்கள், இந்த அதிகாரம் "உபத்திரவப்படுத்தப்பட்டவர்களின் புகலிடத்தைப் பற்றி, ஒப்புக்கொடுத்திருப்பவர்களின் சந்தோஷத்தைப் பற்றி, மீட்கப்பட்டவர்கள் எல்லாருடைய இலக்கைப்

பற்றி" கூறுகிறது என்று எழுதினார்.[5] இவ்வசனங்கள், முதல் நூற்றாண்டில் மரணத்தை எதிர்கொண்டிருந்த கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துவதற்கு எழுதப்பட்டன - இவைகள் இன்றைய நாட்களிலும் தொடர்ந்து ஆறுதலைக் கொண்டுவருகின்றன.

## *காட்சி (7:9-12, 14)*

***மக்கள் கூட்டத்தை அடையாளப்படுத்துதல் (வசனங்கள் 9, 11, 14)***

*இவ்வசனப் பகுதியானது, அரியணையைச் சுற்றிலும் மீட்கப்பட்டவர்கள் இருக்கும் சித்தரிப்பைக் கொண்டு தொடங்குகிறது: "இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான[6] திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்" (வசனம் 9).*

*வசனம் 11அ, "தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து," என்று கூறுகிறது. இது அதிகாரம் 4ல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த அரியணைக்காட்சியாக உள்ளது. ("அரியணைச் சுற்றிலும் இருந்த காட்சிகள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இந்தப் பகுதியில் நாம் ஒரு முழு வட்டத்திற்கு வந்துள்ளோம்:[7] அதிகாரம் 4ல் நாம், அரியணையைக் கொண்டு தொடங்கி, பின்பு மூப்பர்களையும் உயிருள்ள ஜீவன்களையும் கூட்டினோம். அதிகாரம் 5ல் நாம், இந்தக் காட்சியில் ஆட்டுக்குட்டியானவரையும் தூதர்களையும் சேர்த்துக் கொண்டோம். இப்போது அதிகாரம் 7ல், அரியணை அறையில் எண்ண முடியாத பெருந்திரளான மக்கள் கூட்டம் சூழ்ந்துள்ளது. ("அரியணையைச் சுற்றிலும் மக்கள்திரள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இந்தத் திரளான கூட்டத்தவர் யார்? எனது சிந்தையானது 1956ன் வசந்த காலத்தை நோக்கிப் பின்செல்கிறது. அப்போது நான், அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் (இப்போது பல்கலைக் கழகம்), வெளிப்படுத்தின விசேஷம் பற்றி பிராங்க் பேக் அவர்கள் நடத்திக்கொண்டிருந்த வகுப்பில் இருந்தேன். ஒரு நாள், சகோதரர் பேக் அவர்கள், தமக்குப் பதிலாக என்னை அவரது வகுப்பை நடத்தும்படி கேட்டுக்கொண்டார். வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17 வசனப் பகுதியைப் போதிக்கும் பொறுப்பு என்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. நான் வகுப்பில் போதித்தபோது, இந்தத் திரளான மக்கள் கூட்டம் என்பது அடிப்படையில், வசனங்கள் 1முதல் 8வரையுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 144,000 பேரைக் கொண்ட அதே குழுவாகவே உள்ளது என்று கூறினேன்.[8] எனது வகுப்புத் தோழர்களில் சிலர் இதில் பெரிதும் கருத்து வேறுபட்டனர் - அதை நான் அறியும்படி அனுமதிக்க அவர்கள் தயங்கவில்லை. அடுத்த வகுப்புப் பிரிவுவேளையின்*

தொடக்கத்தில், அதைப் பற்றி அவர்கள், சகோ. பிராங்க் அவர்களிடத்தில் கேட்டனர். அவர் என் முடிவை ஒத்துக்கொண்டார், ஆனாலும் மாணவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர் அந்த வகுப்பின் எஞ்சிய நேரத்தை, நான் எடுத்துரைத்து முடித்திருந்த அதே வசனப்பகுதிக்கு விளக்கம் தருவதில் செலவிட வேண்டியிருந்தது. அந்த செம்ஸ்டர் கால வேளையில் அவர் மீண்டும் ஒருமுறை வகுப்பிற்கு வராதிருத்தல் என்பது இல்லாதவாறு உறுதிப்படுத்திக் கொண்டார் என்று நான் சிறந்த வகையில் நினைவுகூர முடிகிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக நான் அடைந்த (இம்) முடிவை இன்னமும் நான் பற்றிக்கொண்டுள்ளேன் - அதாவது, இவ்விரு குழுக்களும் அடிப்படையில் ஒரே குழுவினராகவே உள்ளனர். பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் என்னுடன் கருத்து ஒருமைப்படுகின்றனர். அவ்வாறு கருத்து ஒருமைப்படாதவர்கள் இவ்விரு குழுக்களுக்கும் இடையில் இருப்பதாகத் தோன்றுகிற பின்வரும் வேறுபாடுகளைச் சுட்டிக்காண்பிக்கின்றனர்:

(1) முதல் குழுவில் யூதர்கள் இருக்க, இரண்டாவது குழுவில் புறஜாதியார் இருந்தனர் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இருப்பினும் முந்திய பாடத்தில் நாம், 144,000 பேர்கள் என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய சபையைக் குறிக்கிறது - இது இரட்சிக்கப்பட்ட எல்லாருடைய அடையாளத்துவமாக உள்ளது - என்று வலியுறுத்தியிருந்தோம். இந்தப் பாடத்தின் வசனப்பகுதியில், பெருந்திரளான மக்கள் கூட்டத்தில், "*சகல ஜாதிகளிலும்*" இருந்து மீட்கப்பட்டவர்கள் இருந்தனர் என்று நமக்குக் கூறப்படுகிறது (வசனம் 9) - இது யூதர்களைத் *தவிர* மற்ற எல்லா இனங்களிலும் என்றிருப்பதில்லை. ஆகையால் இரு குழுக்களிலுமே, யூத அல்லது புறஜாதிப் பின்னணியைக் கொண்டிருந்தவர்களில் இருந்து இரட்சிக்கப்பட்ட எல்லாரும் இருந்தனர்.

(2) முதல் குழுவானது எண்ணப்பட்டுள்ளது அதே வேளையில் இரண்டாவது குழுவானது எண்ணப்படாதுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது என்று சிலர் நினைக்கின்றனர். இருப்பினும், பெருந்திரளான மக்கள் கூட்டங்கள் இரண்டை யோவான் *கண்டிருந்தார்* என்பதைக் கவனியுங்கள். அவர் முதல் குழுவை எண்ணவில்லை; எண்ணிக்கை அவருக்குக் கூறப்பட்டது. (எனது சகோதரர் காய் ரோப்பர், ஒருமுறை என்னை, மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கால்பந்து விளையாட்டிற்கு அழைத்துச் சென்றார். இருக்கைகளில் அமர்ந்து இருந்தவர்களை எண்ணிக் கணக்கிடுதல் என்பது எனக்குச் சாத்தியமற்றதாயிருந்தது, ஆனால் அங்கு 100,000க்கும் அதிகமானவர்கள் இருந்தனர் என்று எனக்குக் *கூறப்பட்டது*.) 7:4ல் உள்ள 144,000 என்ற எண்ணிக்கை நேரடி அர்த்தம் கொண்டதல்ல, ஆனால் அது ஒரு அடையாளத்துவமாக உள்ளது. ஒருகூட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை கூறப்பட்டது, இன்னொரு கூட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை கூறப்படவில்லை என்ற உண்மையானது, இரு குழுக்களும் அடிப்படையில் ஒரே குழுதான் என்ற முடிவைப் பற்றிப் பிரச்சனை எதையும் முன்னிறுத்துவதில்லை.[9]

*அதிகாரம் 7ல் உள்ள இரண்டு காட்சிகளையும் நான் பின்வருமாறு ஒன்று கலப்பேன்: வசனங்கள் 1முதல் 8வரையுள்ள பகுதியானது, அழிவின் காற்றுகள் கட்டவிழ்க்கப்படும்போது கிறிஸ்தவர்களைப் பாதுகாப்பதற்காக அவர்களை முத்திரையிடுதல் பற்றிக் கூறுகிறது. 144,000 பேர் என்பது - கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களில் - சபையின் உறுப்பினர்கள் எல்லாரையும் குறிக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் முத்திரையிடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றார். அந்தச் சூழ்நிலையானது ஒரு கேள்வியைத் தூண்டுகிறது: தேவனுடைய (இந்த) பாதுகாப்பு போதுமானதாக உள்ளதா; இது செயல்விளைவு கொண்டதாக உள்ளதா? வசனம் 9முதல் 17வரையுள்ள பகுதியானது அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கிறது: அந்தத் திரளான கூட்டத்தார் "மிகுந்த உபத்திரவத்திலிருந்து" உயிர்பிழைத்தவர்களாய் இருந்தனர் (வசனம் 14). முத்திரையிடப்பட்டவர்கள் பேரழிவின் காற்றுகளினால் அழிக்கப்படவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தில் பாதுகாப்பாக பத்திரமாக வந்து சேர்ந்திருந்தனர்! 144,000 பேர் என்பது இவ்விதமாக, யுத்தத்திற்கு முன்பிருந்த (தேவனுடைய) மக்களைக் குறிக்கிற வேளையில், திரளான மக்கள் கூட்டம் என்பது, யுத்தத்திற்குப் பின்பு, வெற்றிபெற்று, வெற்றி ஆரவாரம் செய்த (தேவனுடைய) மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது.[10]*

*தொடக்க காலக் கிறிஸ்தவர்கள், அதிகாரம் 7ஐ வாசித்தபோது, அது அவர்களுக்கு, "நீங்கள் ரோமாபுரியை எதிர்கொள்ளும்போது, தேவன் உங்களுடன் இருந்து உங்களைப் பாதுகாப்பார். ரோமாபுரியார் உங்களைக் கொலைசெய்தாலும், நீங்கள் கர்த்தருடன் இருக்கும்படி இல்லம் திரும்புதல் என்பதே அதனால் ஏற்படும் ஒரே விளைவாய் இருக்கும்!" என்று கூறிற்று. இவ்வசனப்பகுதியை நீங்களும் நானும் வாசிக்கும்போது, இது நமக்கு, வாழ்வு என்பது எவ்விதப் பிரச்சனைகளைக் கொண்டுவந்தாலும், நாளையதினம் என்பது பிரகாசமான நாளாக இருக்கும் என்று வாக்குறுதி அளிக்கிறது!*

***வசனப்பகுதியைப் பரிசோதித்தல் (வசனங்கள் 9-12)***

*இந்த மேற்கண்ணோட்டத்தைச் சிந்தையில் கொண்டவர்களாய் நாம் இவ்வசனப்பகுதியை, வசனத்திற்குப் பின் வசனமாகக் கண்ணோக்குவோம்:*

*யோவான், "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்களை" கண்டார் (வசனம் 9அ). ஆபிரகாமின் சந்ததியானது, பூமியின் தூளைப் போலவும், வானத்தின் நட்சத்திரங்கள் போலவும் கடற்கரையில் உள்ள மணலத்தனையாகவும் இருக்கும் என்று அவருக்குக் கூறப்பட்டது (ஆதியாகமம் 13:16; 15:5; 32:12). கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் ஆபிரகாமின் சந்ததியாய் இருப்பதால் (ரோமர் 4:11; கலாத்தியர் 3:29), இந்த விவரிப்பு விசேஷமாய் ஏற்புடையதாகக் காணப்படுகிறது.*

*திரளான மக்கள் கூட்டம் "சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும்" ஆக இருந்தது (வசனம் 9ஆ). முன்னதாக, ஆட்டுக்குட்டியானவர் "சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத்*

*தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு" (5:9ஆ) என்ற வார்த்தைகளினால் துதிக்கப்பட்டிருந்தார்.*[11] *இரட்சிக்கப் பட்டவர்கள், ஒவ்வொரு இனப்பின்னணியிலும் இருந்து வந்திருந்தனர். ஒரு பெரிய மாநகரத்தின் சுறுசுறுப்பான தெருவின் மூலையொன்றில் நீங்கள் நின்று பல இனக் கூட்டத்தைக் கவனித்திருந்தால், யோவான் கண்டது பற்றிய சிறுநோக்கை நீங்கள் கொண்டிருக்கலாம்.*

*இது "ஒரு பெரும் சேனையாக"* ["a *vast* host" (AB)] *இருந்தது என்பதைக் கவனியுங்கள். ''ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' என்று இயேசு வலியுறுத்தி இருந்தார் (மத்தேயு 7:14) - ஆனால் "சிலர்" என்பது சார்புச் சொற்றொடராக உள்ளது. கர்த்தர் விலக்கி வைத்துள்ள எவரையும் இரட்சிக்கப்பட்டவர்களில் உள்ளடக்குதல் என்பது தவறானதாக உள்ளது, கர்த்தர் உள்ளடக்குகின்ற எவரையும் விலக்கி வைத்தல் என்பதும் தவறானதாகவே உள்ளது. பழங்கால இரட்டை அர்த்தப்பாடல் ஒன்று பின்வருவது போன்று முடிகிறது: "நானும் நீங்களும் மாத்திரமே பரலோகம் செல்லுகின்றோம் … சில வேளைகளில் நான் உங்களைப் பற்றி ஆச்சரியப்படுகின்றேன்."*

*நாம் ''எலியாவின் மனநிலையை'' தவிர்க்க வேண்டும்: ''நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்" (1 இராஜாக்கள் 19:10, 14). நாம் அவ்வாறு உணரும்போது, "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால் களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேர் இஸ்ரவேலிலே மீதியாக" இருத்தல் (1 இராஜாக்கள் 19:18) பற்றி நமக்கு நினைவூட்டப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. அல்லது, வெளிப்படுத்தின விசேஷம் 7ன் சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவ தென்றால், கர்த்தருக்கு இன்னமும் உண்மையாக நிலைத்துள்ளவர்களான, "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்" உண்டு (வசனம் 9அ)!*

*நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன், நீங்கள் அவ்வாறு இல்லையா? பரலோகம் என்பது "ஆவிகளின் நகரமாக,"*[12] *அதன் தெருக்கள் வெறுமை யாக மற்றும் அதன் கட்டிடங்கள் காலியாக இருத்தல் என்பது கவலைக்குரிய தாக இருக்காதா? அது மகிழ்வுள்ள மக்களால் பொதியப்பட்ட உயிர்த்துடிப் புள்ள நகரமாயிருக்கும் - வெளிச்சமும் செயல்துடிப்பின் மும்முரமும் கொண்டு, களிகூருதலின் ஒலிகளினால் நிறைந்த ஒரு நகரமாயிருக்கும் - என்று வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு உறுதியளிக்கிறது!*

*பின்பு யோவான், ஒரு பெரிய கூட்டமானது ''சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்க" கண்டதாகப் பதிவுசெய்தார் (வசனம் 9இ). சாலொமோனிடத்தில் சேபாவின் இராஜஸ்திரீ, "உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள், எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்'' என்று கூறினாள் (1 இராஜாக்கள் 10:8ஆ). தேவனுக்கும் இயேசுவுக்கும் முன்பாக நிற்பவர்கள் எவ்வளவு அதிகம் பாக்கியவான்களாக இருப்பார்கள்!*

தேவனுடைய பிரசன்னத்தில் நின்றவர்கள் "வெள்ளை அங்கிகளைத் தரித்து" இருந்தனர் (வசனம் 9இ). ஜெயங்கொள்பவர்களுக்கு வெள்ளை அங்கிகள் வாக்களிக்கப்பட்டிருந்தது (3:4, 5; மேலும் 3:18ஐயும் காணவும்). வெள்ளை அங்கிகள் ''பரலோக அரியணை அறையின் 'ஆஸ்தான உடையாக' இருந்தன.''[13]

''தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து'' (வசனம் 9உ). (வெளிப்படுத்தின புத்தகத்தில்) இவ்விடத்தில்தான் நாம் முதன்முதலாக, குருத்தோலைகளின் அடையாளத்துவத்தை எதிர்கொண்டுள்ளோம். யூதத்துவச் சிந்தனையில், குருத்தோலைகள் என்பது வெற்றி மற்றும் அக்களிப்பு ஆகியவற்றை அடையாளப்படுத்திற்று. யூதமக்களினம் முழுவதற்கும் அகமகிழ்ச்சியான வேளையான கூடாரப்பண்டிகையின் போது குருத்தோலைகள் பயன்படுத்தப்பட்டன (லேவியராகமம் 23:34, 40; மேலும் சகரியா 14:16ஐக் காணவும்). பின்பு, ''யூதாஸ் மக்காபேயஸ் என்பவரின் காலம் தொடங்கி, [குருத்தோலைகள்], அரசத்துவ எதிர்பார்ப்புகளுக்கான யூதத்துவப் பண்டிகைகளின் அடையாளமாயின.''[14] எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிப் பிரவேசத்தின்போது, மக்கள், ''குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்'' (யோவான் 12:13).

வெளிப்படுத்தின விசேஷம் 7ல், குருத்தோலைகளுடன் இருந்தவர்கள் அகம்மகிழ்ந்து இருந்தனர்: "அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்'' (வசனம் 10). "இரட்சிப்பின் மகிமை ... எங்கள் தேவனுக்கும்'' என்ற சொற்றொடரானது, தேவன், நமது இரட்சிப்பின் ஆதாரமூலமாக இருக்கின்றார் என்று அர்த்தப்படுத்துகிறது. RSV வேதாகமத்தில், ''salvation *belongs to* our God'' ["இரட்சிப்பு ... எங்கள் தேவனுக்கு ... *உரித்தானது*"] என்றுள்ளது.

இவ்வசனப் பகுதியில், "இரட்சிப்பு" என்பது, பரலோகத்தில் நித்திய வாழ்வின் கடைசி நிலையைக் குறிக்கிறது. "இரட்சிப்பு" என்பது, கடந்த காலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுதலை (மாற்கு 16:16), தேவனுக்கு உண்மையாக உள்ள பிள்ளையினால் தொடர்ந்து மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் இரட்சிப்பை (2 கொரிந்தியர் 2:15; 1 யோவான் 1:7ஐக் காணவும்), அல்லது (இவ்வசனப்பகுதியில் உள்ளபடி) நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருத்தலைக் குறிப்பிட முடியும். "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பு'' பற்றிப் பேதுரு குறிப்பிட்டார் (1 பேதுரு 1:5ஆ).

"இரட்சிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, முழுமையாக்கப்பட்டிருத்தல், குணமாக்கப்பட்டிருத்தல், கடைசியில் பாதுகாக்கப்பட்டிருத்தல் என்ற கருத்துக்களைத் தழுவிக்கொண்டுள்ளது. இவ்விதமாக, NEB வேதாகமம், இவ்வார்த்தையை ''victory'' ["ஜெயம்"]

*என்று மொழிபெயர்த்து உள்ளது. மீட்கப்பட்டவர்கள் பாவத்தின்மீது வெற்றி கொண்டனர், தங்களுக்கு நேரிட்ட சோதனைகளில் வெற்றி கொண்டனர், தங்கள் விரோதிகளின்மீது வெற்றி கொண்டனர் - எனவே அவர்கள் ஆண்டவரைத் துதித்தனர்!*

*விரைவிலேயே, அரியணை அறையில் இருந்த ஒவ்வொருவரும் துதிப்பதில் இணைந்தனர். " 'மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது' என்றால் (லூக்கா 15:10), மீட்கப்பட்டவர்கள் யாவரும், தங்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, பரலோக சேனையின் வழிபாடு/தொழுது கொள்ளுதல், நம்ப இயலாத வகையில் எவ்வளவு மாபெரியதாக இருக்கும்!"[15]*

> *தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென்,[16] எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும்[17] சதாகாலங்களிலும் உண்டாவதாக, ஆமென், என்றார்கள் (வசனங்கள் 11, 12).*

**சொல்லாக்கத்தை விளக்குதல்**

*வெளிப்படுத்தின விசேஷம் 7:9-12ன் துதி, அங்கிகள், குருத்தோலைகள் மற்றும் பிற விபரங்கள், இவ்விபரங்களில் பெரும்பான்மையானவை "யூதர்களின் பண்டிகைகளில், அதிமகிழ்ச்சிக்குரியதான"[18] - கூடாரங்களின் பண்டிகையில் இருந்து எடுக்கப்பட்டன என்று கவனித்து அறியும்படிக்கு விளக்கவுரையாளர்களைத் தூண்டுகிறது. இந்தப் பண்டிகை, யூதர்கள் எகிப்தில் இருந்து கானான் நாட்டிற்குப் பயணமானதை நினைவுகூர்ந்தது மற்றும் இது அறுவடைக் காலத்தின் முடிவைக் கொண்டாடியது. இந்தப் பண்டிகைக்கு இணைவாக, வெளிப்படுத்தின விசேஷம் 7:9-12ல் உள்ள சில விபரங்களை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்:*

*அங்கிகள். கூடாரங்களின் பண்டிகையின்போது, மக்கள் பண்டிகைக்கான உடைகளை உடுத்திக்கொண்டு, தேவனைத் துதித்துப் பாடி, ஜெபித்தனர்.*

*குருத்தோலைகள். "முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள்" (லேவியராகமம் 23:40) என்று யூதர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. இந்தப் பண்டிகை நாட்கள் யாவற்றிலும் குருத்தோலைகள் பயன்படுத்தப்பட்டன.*

*துதிகள். தேவன் தமது மக்களை வனாந்தர வழியில் பாதுகாப்பாகக் கொண்டு வந்ததற்காகப் புகழப்பட்டார்.*

*நமது வசனப்பகுதியில் எஞ்சியுள்ள 7:13-17ல் சாத்தியக்கூறுள்ள மற்ற இணைவுகள் அடங்கியுள்ளன:*

*கூடாரங்கள் (அல்லது தற்காலிக வசிப்பிடங்கள்). இந்தப்*

பண்டிகையின்போது, யூதர்கள் தங்கள் முன்னோர்களின் வனாந்தர யாத்திரையைத் தங்களுக்கு நினைவூட்டும்படி தற்காலிக கூடாரங்களில் வசித்தனர். தங்குமிடம் அல்லது உணவு ஆகியவற்றில் குறைவுபடுபவர்கள் மற்றவர்களின் கூடாரங்களுக்கு (தற்காலிக வசிப்பிடங்களுக்கு) அழைக்கப் பட்டனர். அதுபோலவே, மீட்கப்பட்டவர்கள் பாதுகாக்கப்படவும் அவர்களுக்குத் தேவையானவைகள் அளிக்கப்படவும் கூடும்படிக்கு (வசனம் 16) தேவன் "இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வசனம் 15).

*தண்ணீரண்டைக்கு நடத்தப்படுதல்.* கூடாரங்களின் பண்டிகையினுடைய கடைசிநாள் "பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள்" (யோவான் 7:2, 37) என்று அழைக்கப்பட்டது. அந்த நாளில், குதூகலம் கொண்ட ஆராதனையாளர்கள் ஆசாரியருடன் இணைந்து சீலோவாம் குளத்திற்குச் செல்வார்கள், அங்கு ஆசாரியர், பண்டிகை ஆசரிப்புகளுக்குப் பயன்படுத்தப் படுவதற்காகத் தண்ணீரை மொள்ளுவார். அதுபோலவே, மீட்கப்பட்ட வர்களை ஆட்டுக்குட்டியானவர், "ஜீவத்தண்ணீருள்ள ஊற்று களண்டைக்கு" நடத்துவார் (வெளிப்படுத்தின விசேஷம் 7:17).[19]

இவ்வுருவகத்தில் பெரும்பான்மையான பகுதியானது கூடாரங்களின் பண்டிகையில் இருந்தே வந்தது என்று நிச்சயமாகத் தோன்றுகிறது. அது அவ்வாறு இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும், 7:9-17 வசனப்பகுதி யானது, குதூகலமான ஆராதனையாளர்களைச் சித்தரிக்கிறது. அவர்கள் "மகா உபத்திரவத்தினூடே" கடந்து வந்திருந்தனர், ஆனால் அவர்கள் எலும்புகளில் களைப்படைந்தவர்களாகவோ அல்லது யுத்தத்தினால் இளைப்படைந்தவர்களாகவோ இருக்கவில்லை. அவர்கள் மகிழ்ச்சி பொங்கியவர்களாக, அதீதமான சந்தோஷம் கொண்டவர்களாக, வெற்றிவீரர்களாக இருந்தனர்!

## தனிச்சிறப்பு (7:13-17)

உண்மையுள்ளவர்கள் பரலோகத்தில் எவ்வாறு ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள் என்பதை நாம் மதித்துணர்ந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, ஆர்வம் நிறைந்த ஒரு கேள்வி - பதில் வேளையை யோவான் பதிவுசெய்வதற்குக் கர்த்தர் உதவினார்.[20] "அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன்[21] [பதில் அளித்து[22]] என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான்" (வசனம் 13).

> தீர்க்கதரிசி தமது கண்களை நிழலிட்டுக் கண்ணோக்கினார், ஆனால் அவர் வெள்ளை உடையை உணரத் தவறினார். அதைப்போன்ற ஒன்றை அவர் ஒருக்காலும் கண்டதில்லை. அவர், துக்கத்தின் கறுப்பு நிறம், பாவத்தின் சிவப்பு நிறம், இராஜரீகத்தின் இளஞ்சிவப்பு நிறம் ஆகியவற்றை அறிந்திருந்தார்; அவர், மறக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் இருந்து மாபெரும் மனிதர்களைப் பிரித்துக்காட்டும் பொன் மற்றும் வெள்ளி அலங்கரிப்புக்கொண்டதும் நகையணிவித்து அலங்கரிக்கப்பட்டதுமான தலைப்பின்னல்களையும் கண்டிருந்தார்; ஆனால் இங்கு, வித்தியாசப்படுத்துவதற்குப் புதிதான ஒரு

*அடையாளம் இருந்தது, அது தூயவெள்ளை நிறத்தினால் ஆன அங்கியாக, பூமியில் ஒருக்காலும் காணப்பட்டிராத, வானத்திற்குரிய முறைமையின் சின்னமாக இருந்தது.*[23]

*யோவான், இவர்கள் யார் என்பது பற்றிய தமது அறியாமையை ஒப்புக் கொண்டு, தகவல் அறிவதற்கு விருப்பத்தை வெளியிட்டார்: "ஆண்டவனே,*[24] *அது உமக்கே தெரியும்" (வசனம் 14அ).*

*மூப்பரின் பதிலானது, நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் ஆசீர்வாதங்களைப் பற்றிய ஒரு விரிவான விவரிப்பைத் தருகிறது.*

***உயிர்பிழைத்திருத்தலின் ஆசீர்வாதம் (வசனம் 14ஆ)***

*மூப்பர், "வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்?" என்று கேட்டிருந்தார். இப்போது மூப்பர் தமது சொந்தக் கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்"*[25] *(வசனம் 14ஆ).*

*"மகா உபத்திரவம்" என்ற சொற்றொடரானது, இரண்டாம் வருகைக்குப்பின்பு உடனடியாக வருவதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ள ஏழாண்டு காலகட்டத்தைக் குறிக்கும் நுட்பச் சொற்றொடராக இருப்ப தில்லை என்பதை வலியுறுத்துவதற்குச் சற்றே தாமதிக்க என்னை அனுமதி யுங்கள்.*[26] *தேவனுடைய மக்கள், எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கால அளவுக்கு உபத்திரவத்தில் உயிர்பிழைத்து இருப்பார்கள் என்ற கருத்தானது யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளித்து இருந்திராது. தொடக்க நூற்றாண்டுகளில் இருந்த சபையின் கிறிஸ்தவர்கள் "மகா உபத்திரவம்" என்ற சொற்றொடரை வாசித்தபோது, அது அவர்களுக்கு ஒரு விஷயத்தை அர்த்தப்படுத்தி யிருக்கும்: அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த சோதனைகளும் உபத்திரவங்களும்தான்.*

*நமது படிப்புகளில் நாம், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் உடனடியான எதிர்காலத்தில் சோதனைகளின் பயங்கரமான காலத்தை முன்னுரைத்தது என்று கண்டுள்ளோம். சிமிர்னாவில் இருந்த சபைக்கு, "இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்" என்று கூறப்பட்டிருந்தது (2:10ஆ). பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்தைக்" குறித்துக் கூறப் பட்டிருந்தது (3:10ஆ). சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவனுக்கு, "பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது" (6:4ஆ). பலிபீடத்தின் கீழ் இருந்த வேதசாட்சியாக மரித்தவர்களுக்கு, "அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்*

கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று" கூறப்பட்டிருந்தது (6:11). "மகா உபத்திரவம்" என்பது சந்தர்ப்பப்பொருளில் அனேகமாக, ரோம அரசாங்கத்தினால் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.

இருப்பினும் இவ்வசனப்பகுதியானது இன்னமும் நமக்குச் செய்தியைக் கொண்டுள்ளபடியால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது: ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவன் தமது மக்களை, அவர்களின் காலம் மற்றும் இடம் ஆகியவற்றிற்கே உரித்தான சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் ஆகியவற்றில் இருந்து உயிர்பிழைத்திருக்க உதவுவார். "உபத்திரவம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் வினை வடிவமானது "அழுத்துவதற்கு அல்லது இறுக்குவதற்கு" என்று அர்த்தப்படுகிறது; இது கோதுமை அல்லது வாற்கோதுமையை நேர்த்தியான மாவாக்குவதற்காக அரைப்பதைக் குறிப்பிடுகிறது.

> இங்கு சித்தரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியானது, இடம் அளிக்காத கீழ்பாகமும் மற்றும் அழுத்துகிற மேல்பாகமுமாகிய இரு கற்களுக்கு இடையில் நசுக்கப்படும் செயல்முறையாக உள்ளது. இதைக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நடைமுறைப்படுத்தும்போது, கிறிஸ்தவர் தமது முற்றான விசுவாசத்தின் விளைவுகளற்ற கேட்புகளுக்கும், உடன்பாட்டிற்கான உலகத்தின் நசுக்கும் அறைகூவலுக்கும் இடையில் நசுக்கப்பட்டு நிற்கின்றார் என்று அர்த்தப்படுகிறது.[27]

இயேசு தமது சீஷர்களுக்கு, "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று வலியுறுத்தியிருந்தார் (யோவான் 16:33ஆ), புதிய கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று" எச்சரிக்கை செய்திருந்தார் (நடபடிகள் 14:22ஆ). "மகா உபத்திரவம்" என்ற சொற்றொடர் "தேவனுடைய மக்களின் - தேவனுடைய எல்லா மக்களின் - பூமிக்குரிய அனுபவம்"[28] என்பதற்கு நடைமுறைப்படுத்தப்படக்கூடும் என்று எட்வர்டு மெக்டோவெல் அவர்கள் முடிவுசெய்தார். விழுந்துபோன ஒரு உலகத்தின் மத்தியில் உண்மைநிறைந்த வாழ்வை வாழ்வதற்கு முயற்சிசெய்கின்ற ஒவ்வொருவருக்கும் உபத்திரவம் பொதுவானதாக உள்ளது என்பதை வேதாகமம் தெளிவாக்குகிறது (கொலோசெயர் 1:24; 2 தீமோத்தேயு 3:1-5).

இவ்வசனப்பகுதியின் கருத்தை நாம் தவறவிடுமளவுக்கு உபத்திர வத்தை அடையாளப்படுத்துவதில் மிகவும் மூழ்கிப்போய்விடக்கூடாது: பரலோகத்தில் இருந்த பரிசுத்தவான்கள் உயிர்பிழைத்திருந்தனர். உபத்திரவம் என்பது எவ்வளவு பயங்கரமானதாக இருப்பினும், அது ஒருக்காலும் என்றென்றும் இருப்பதில்லை. கர்த்தருக்குள் உண்மையாய் நிலைத்திருங்கள், நீங்களும்கூட உங்கள் தனிப்பட்ட உபத்திரவங்களில் உயிர்பிழைத்திருக்க முடியும்.

*இரட்சிப்பின் ஆசீர்வாதம் (வசனம் 14இ)*

*பின்பு மூப்பர், திரளான மக்கள் கூட்டத்தினரால் அணியப்பட்டிருந்த வெண்மை நிறமான அங்கியின் தனிச்சிறப்புப் பற்றி விளக்கியுரைத்தார்: "இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வசனம் 14இ).*

*''இரத்தத்திலே தோய்த்து'' என்ற சொற்றொடரின் வலியுறுத்தம் உருவகத்தைத் தவற விடுமளவுக்கு அது நம்மில் சிலருக்கு மிகவும் பழக்கமானதாக உள்ளது. பாவம் நிறைந்த வாழ்வை, அழுக்கான உடையுடன் ஒப்பிடும் கருத்தானது மிகவும் சாதாரணமானதாக/பொது வானதாக உள்ளது (ஏசாயா 64:6; சகரியா 3:3-5), ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 7:14ல் அழுக்கான உடையை வெண்மையாக்குவதற்கு, அது சிவப்பான இரத்தத்தில் தோய்க்கப்பட்டிருந்தது. S. D. கோர்டன் அவர்கள், ''இயேசுவுக்குள் இருக்கின்ற ஒரு வேதியியல் நிபுணத்துவமும் ஒரு கலைத்துவமும் எப்படிப்பட்டதாக உள்ளது! அவர், மரித்துப்போன கறுப்பு நிறத்தில் இருந்து தூய்மையான வெண்மை நிறத்தை உருவாக்க, பிரகாசமான சிவப்பு நிறத்தைப் பயன்படுத்துகின்றார்"[29] என்று எழுதினார்.*

*அரியணையைச் சுற்றிலும் இருந்தவர்கள் சுத்திகரித்தலில் செயல்படா தவர்களாக இருந்ததில்லை என்பதைக் கவனியுங்கள்: இவர்கள் "தங்கள் அங்கிகளைத் தோய்த்திருந்தனர்''; இவர்கள் ''அவற்றை இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கியிருந்தனர்.''[30] பிரசங்கியாரான அனனியா, சவுலினிடத்தில் "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு'' என்று கூறினார் (நடபடிகள் 22:16ஆ). மனம்வருந்திய விசுவாசிகள் என்ற வகையில், ஞானஸ்நானத் தண்ணீரில் நாம் முழுக்காட்டப்படும்போது, நமது ஆத்துமாக்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டுச் சுத்திகரிக்கப்படுகின்றன. பின்பு, கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் தேவனுடைய வசனத்தின்படி நடக்கையில் (சங்கீதம் 119:105), அந்த இரத்தம் நம் பாவங்களைத் தொடர்ந்து கழுவுகிறது (1 யோவான் 1:7). ''குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்காக'' தேவனுக்கு நன்றி (1 பேதுரு 1:19)!*

*ஊழியத்தின் ஆசீர்வாதம் (வசனம் 15அ)*

*அடுத்ததாக, மூப்பர் "ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்கா சனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும்[31] அவருடைய ஆலயத்திலே[32] அவரைச் சேவிக்கிறார்கள்" என்று கூறினார் (வசனம் 15அ).*

*பரலோகம் என்பது, செயல்முனைப்பு இல்லாத ஒரு இடமாக, மிருதுவான மேகங்களின்மீது, பளிச்சிடும் வெண் உடைகளை அணிந்தவர்களாய், - நித்தியம் முழுவதற்கும் - கைகளைக் கட்டிக்கொண்டு நாம் அமர்ந்திருக்கும் இடமாக அடிக்கடி சித்தரிக்கப்பட்டுள்ளது. அது சலிப்பூட்டுவதாக இருக்காதா? பரலோகம் என்பது செயல்முனைப்பின் இடமாக - நாம் தேவனைத் தொழுதுகொண்டு அவரைச் சேவிக்கும்*

இடமாக - உள்ளது என்பதை நாம் அறியவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (22:3ஐயும் காணவும்).[33]

ஒருநாள், மெர்லீ ஹன்ட்டர் என்ற சகோதரி, அடுத்து வரவிருந்த ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்காகக் கர்த்தரின் பந்திக்கான தட்டுகளைக் கழுவுக்கொண்டிருந்தபோது, அந்த சகோதரி பிரசங்கியாரிடத்தில், “நான் பரலோகம் செல்லும்போது, சுத்தம் செய்ய வேண்டிய சிலவிஷயங்கள் அங்கிருக்கும் என்று நான் நம்புகின்றேன்!” என்றார்கள்.[34] (தேவனைத் துதித்தல் என்பதைத் தவிர) நாம் வேறு எவற்றைச் செய்துகொண்டிருப் போம் என்பது பற்றி நாம் மிகச்சரியாக அறிய இயலவில்லை, ஆனால் பின் வருவதை நாம் அறிந்துள்ளோம்: நாம் பணி மும்முரமாய் இருப்போம், நாம் மகிழ்ச்சியாய் இருப்போம்! ருட்யார்ட் கிப்லிங்க் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

பூமியின் கடைசிச் சித்திரம் வரையப்பட்டு
  வண்ணக்குப்பிகள் பிதுக்கி உலர்ந்துபோகும்போது,
பழைய வண்ணங்கள் மங்கிப்போய்,
  இளம் விமர்சகர் மரித்திருக்கும்போது,
நாம் இளைப்பாறுதல் அடைந்திருப்போம்,
  நமக்கு விசுவாசம் மாத்திரமே தேவைப்பட்டிருக்கும்
நல்ல பணியாளர்கள் யாவருக்கும் எஜமானரானவர்
  நம்மைப் புதிய பணியில் இடும் வரைக்கும்
ஒன்றிரண்டு யுகமுடிவில் நாம் கீழே கிடப்போம்.
. . . . . . . . . . . . . . . . . .
எஜமானர் மாத்திரமே நம்மைப் புகழுவார்,
  எஜமானர் மாத்திரமே நம்மைக் குற்றம்சாட்டுவார்;
எவரொருவரும் பணத்திற்காகப் பணியாற்றமாட்டார்,
  எவரொருவரும் புகழுக்காகப் பணியாற்றமாட்டார்,
ஆனால் ஒவ்வொருவரும் பணியாற்றுதலின் மகிழ்ச்சிக்காகவே
  மற்றும் ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட விண்மீனில் பணியாற்றுவார்,
அவர் தாம் காணுகின்றபடி, விஷயங்களைத்
  தேவனுக்காகத் தரவழைப்பார்![35]

**பாதுகாக்கப்பட்டிருத்தலின் ஆசீர்வாதம் (வசனங்கள் 15ஆ, 16, 17இ)**

யோவான் தொடர்ந்து, ‘‘சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்’’[36] என்று குறிப்பிட்டார் (வசனம் 15ஆ). தேவன் தமது மக்களுக்குள்ளே ‘‘வாசமாயிருப்பார்’’ என்ற உருவகமானது, அவர்களை அவர் பாதுகாத்துப் பராமரிப்பார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. RSV வேதாகமத்தில், அவர் ‘‘தமது பிரசன்னத்திஞல் அவர்களைப் பாதுகாப்பார்” என்றுள்ளது.

அடுத்ததாக யோவான், விளைவைப் பற்றிக் கூறினார்: “இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ண மாவது இவர்கள்மேல் படுவதுமில்லை” (வசனம் 16).[37] இங்கு “மனிதனின் ஆவிக்குரிய ஏங்குதல்களின் நிறைவான திருப்தி” உள்ளது.[38] வாழ்வின்

போராட்டங்கள் முடிந்துவிட்டன!

பின்பு அவர், "வேதாகமம் முழுவதிலும் மிகவும் மென்மையான சிறிய வாக்கியத்தை"[39] கூடுதலாகக் கூறினார்: "தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்"[40] (வசனம் 17இ), தேவன், வருத்தத்தின் கண்ணீர் ஒவ்வொன்றையும், இழப்பின் கண்ணீர் ஒவ்வொன்றையும், ஏமாற்றத்தின் கண்ணீர் ஒவ்வொன்றையும், வேதனையின் கண்ணீர் ஒவ்வொன்றையும் துடைப்பார்.

கவிஞர் இராபர்ட் பர்ன்ஸ் என்பவரால், "இந்த அதிகாரத்தின் கடைசி வசனங்களைக் கண்ணீர் இன்றி வாசிக்க முடியாதிருந்தது'' என்று கூறப்பட்டுள்ளது.[41] வில்லியம் பார்க்ளே அவர்கள், "புலம்புதலின் இல்லத்திலும் மரண வேளையிலும் இவ்வசனப்பகுதியில் இருந்து ஆறுதலைக் கண்டறிந்துள்ளவர்களை எண்ணி முடித்தல் சாத்தியமற்றதாக இருக்கும்" என்று எழுதினார்.[42]

### மேற்பார்வையிடுதலின் ஆசீர்வாதம் (வசனம் 17அ, ஆ)

இவ்வசனப் பகுதியானது, "சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து"[43] (வசனம் 17அ; யோவான் 10:11ஐக் காணவும்) என்று உறுதிப்படுத்துதலுடன் முடிகிறது. ஆட்டுக்குட்டியானவர் ஒரு மேய்ப்பரின் பணிப்பொறுப்பை நிறைவேற்றுதல் என்ற அடையாளத்துவம் நமக்கு வினோதமானதாகத் தோன்றலாம்,[44] ஆனால் ஒரு ஆட்டைத் தவிர வேறு எவரால் இன்னொரு ஆட்டின் தேவைகளை அதிகமாகப் புரிந்துகொள்ள முடியும்?

மேய்ப்பர் என்ற வகையில் இயேசு தமது மக்களை "ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்" (வசனம் 17ஆ)[45] - "பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறது'' (வெளிப்படுத்தின விசேஷம் 22:1) - என்பது அவர் செய்கின்ற செயலாக உள்ளது.

ஏர்ல் பால்மர் அவர்கள், "எனது விசுவாசத்தின் அன்றாட நடையின் ஆண்டவர் இன்றைய நாளில் ஆண்டவராய் இருக்கின்றது போலவே எனது பயணமுடிவிலும் ஆண்டவராய் இருப்பார், அவரை அவ்வாறே நான் சந்திப்பேன் ... மனித குல வரலாற்றின் எல்லையில் நிற்கின்றவர் அந்நியரல்ல, ஆனால் கலிலேயாவிலும், யோர்தானிலும் எருசலேமின் அருகில் இருந்த கொடிய குன்றிலும் நின்றிருந்த அதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார்" என்பதில் ஆறுதலைக் கண்டறிந்தார்.[46] கோர்ரீ டென் பூம் என்ற பெண்ணின் தந்தையார் அவளிடத்தில், "இயேசு உன் கையைப் பற்றிக்கொள்ளும்போது, அவர் உன்னை அணைத்துக் கொள்ளுகின்றார். இயேசு உன்னை அணைத்துக் கொள்ளும்போது, அவர் உன்னை வாழ்வு முழுவதிலும் வழிநடத்துகின்றார். இயேசு உன்னை வாழ்வு முழுவதிலும் வழிநடத்தும் போது, அவர் உன்னை பத்திரமாய் இல்லத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றார்" என்று கூறினார்.[47]

## முடிவுரை

பவுல் ஒருமுறை, "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" என்று எழுதினார் (பிலிப்பியர் 1:23ஆ). எவ்வளவு நன்மையாயிருக்கும்? பின்வருமளவுக்கு நன்மையாயிருக்கும்: நாம் தேவனுடன் தனிப்பட்ட வகையில் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்போம். இந்த பூமியின் அற்பத்தனமும் அழுக்கும் நீங்கிப்போயிருக்கும்; நாம் வெள்ளைஅங்கிகளை உடுத்தியிருப்போம். நாம் கர்த்தரைத் துதித்துச் சேவித்துக் கொண்டிருப்போம். ஒவ்வொரு தேவையும் நிறைவேற்றப்படும். இயேசு நமது நிலையான துணையாளராக இருப்பார். தேவன் ஒவ்வொரு கண்ணீரையும் துடைப்பார்.

அது உங்களை பரலோகம் செல்வதற்கு விரும்பும்படி செய்வதில்லையா? "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (7:14இ) மாத்திரமே அங்கிருப்பார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்கள் இரத்தத்தினால் கழுவப்படவில்லை என்றால், நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியதும் (நடபடிகள் 22:16), பின்பு அந்த இரத்தம் உங்களைத் தொடர்ந்து சுத்திகரிக்கும்படிக்குக் கர்த்தருடன் நடக்க வேண்டியதும் (1 யோவான் 1:7) அவசியமாக உள்ளன.

இந்த பாடத்தையும் இதற்கு முந்திய பாடத்தையும், ஒரு புயலைச் சித்தரிப்பதைக் கொண்டு நான் தொடங்கினேன். ஒருமுறை இயேசு, புயலில் உயிர் பிழைத்திருத்தல் பற்றிய பாடம் ஒன்றை போதித்தார்: மழை இறங்கிவரும்போது, வெள்ளங்கள் வரும்போது, காற்று வீசும்போது. அவரது வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி செய்கின்றவர்களே நிலைநிற்பார்கள் (மத்தேயு 7:24-27). நீங்கள் "புயலுக்கு மேலாக எழும்பி" நிற்க விரும்பினால், நீங்கள் - இன்றைக்கே - அவருக்குக் கீழ்ப்படிதல் அவசியமாக உள்ளது! உங்கள் பாவமன்னிப்பிற்கு நீங்கள் ஞானஸ்நானத்தில் முழுக்காட்டப்படாது இருந்தால் (நடபடிகள் 2:38; 22:16), அதைத் தள்ளிப் போடாதீர்கள். உங்கள் கிறிஸ்தவ நடக்கைக்கு நீங்கள் திரும்பிவர வேண்டியது அவசியமாயிருந்தால், "இப்பொழுதே அநுக்கிரககாலமாக" உள்ளது (2 கொரிந்தியர் 6:2).

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

நீங்கள், புயல் பற்றிய கருத்தைப் பயன்படுத்த விரும்பவில்லையென்றால், இந்தப் பாடத்திற்கு "மற்றொரு பக்கத்தில் இருந்து கண்ணோக்குதல்," "சித்திரத்தின் இன்னொரு பக்கம்" அல்லது "வரலாற்றின் எஞ்சியபகுதி" என்று தலைப்பிடப்பட முடியும். முதல் காட்சியானது (7:1-8) (சபை உபத்திரவத்திற்குத் தயாராகிறது என்ற) ஒரு கண்ணோட்டத்தைக்

*கொடுக்கிறது, ஆனால் இரண்டாம் காட்சியானது (7:9-17) (சபையின் வெற்றி என்ற) கடைசிக் கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது. "பரலோகத்தில் கண்ணீர் இல்லை" என்பது இன்னொரு தலைப்பாக இருக்க முடியும்.*

*மாறுபட்ட ஒரு அணுகுமுறைக்கு நீங்கள், "பரலோகத்தை மகிழ்வுடன் அனுபவிப்பது எப்படி?" என்று ஆய்வுக்கருத்தைப் பயன்படுத்த முடியும்: பரலோகம் என்பது ஆயத்தமான ஒரு மக்களுக்காக ஆயத்தமாக்கப் பட்டுள்ள ஒரு இடமாக உள்ளது (மத்தேயு 25:34; யோவான் 14:2; வெளிப்படுத்தின விசேஷம் 21:27), மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17, எவற்றிற்கு ஆயத்தமாக வேண்டும் என்று கூறுகிறது: (1) தேவனுக்குக் கீழ்ப்படிதலை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் (தேவனுடைய அரியணைக்கு முன்பாக நிற்குதல் (வசனம் 9) என்பது அவரது சித்தத்தைச் செய்வதற்குத் தயாராக இருத்தலைச் சுட்டிக்காண்பிக்கிறது); (2) தேவனை ஆராதிப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் (வசனங்கள் 10-12); (3) ஒரு தூய்மையான வாழ்வை வாழுதலை (வெள்ளை அங்கிகள்; வசனங்கள் 13, 14; மேலும் 19:8ஐயும் காணவும்) மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; (4) கர்த்தரைச் சேவிப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் (வசனங்கள் 15); (5) பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை (முழு வசனப்பகுதியும்) மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இந்தத் தலைப்புடன் கூடிய எனது பிரசங்கத்தை "The Day Christ Came (Again)" and Other Sermons[48] என்ற புத்தகத்தில் காணமுடியும். எனது சமீபத்திய வாசிப்பில் நான், இந்தப் பாடத்தில் பயன்படுத்தப்படக்கூடிய இரண்டு மேற்கோள்களைக் கண்டேன்: "பரலோகம் என்பது சேவிக்கும் இடமாக, ஒவ்வொரு மனிதரும் தமது ஏற்புத்திறன்களின் முழுமையான மேம்பாட்டிற்கு ஏராளமான வாய்ப்புகள் கொண்டிருக்கப் போகின்ற இடமாக இருக்கும் என்று வேதவசனங்கள் போதிக்கின்றன."[49] "பரலோகத்தில் எவரொருவராவது பாடாமல் இருப்பார் என்பதை யோவானால் கற்பனை செய்ய இயலாது இருந்தது."[50]*

*அதிகாரம் 7ஐ நீங்கள் ஒரே பாடத்தில் போதிக்க விரும்பினால், "இங்கிருந்து நித்தியத்திற்கு," "இவை யாவும் மற்றும் பரலோகமும்கூட," அல்லது "முன்பு மற்றும் பின்பு" என்பவை சாத்தியக்கூறுள்ள தலைப்புகளாய் இருக்க முடியும்.*

*நீங்கள் விரும்பினுல், அதிகாரம் 6ஐயும் 7ஐயும் ஒரே பாடத்தில் எடுத்துரைக்க முடியும். "தேவனுடைய சித்தம்" என்பது யாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து இழுக்கின்ற ஆய்வுப்பொருளாக இருக்கும். இவ்விரு அதிகாரங்களிலும் தேவனுடைய சித்தம் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதைக் கொண்டு நீங்கள் தொடங்க முடியும். சாத்தியக்கூறுள்ள துணைத்தலைப்புகள் பின்வருமாறு: (1) தேவனுடைய சித்தமும் உபத்திரவமும் (6:1-11); (2) தேவனுடைய சித்தமும் தண்டனையும் (6:12-17); (3) தேவனுடைய சித்தமும் பாதுகாப்பும் (7:1-8); (4) தேவனுடைய சித்தமும் துதிகளும் (7:9-17).*

*வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், அதிகாரங்கள் 6ஐயும் 7ஐயும், "முத்திரை களும் முத்திரையிடப்பட்டவர்களும்"[51] என்று தலைப்பிடப்பட்ட ஒரு*

*பாடத்தில் ஒன்றிணைத்தார், இதில் அவர் (1) தண்டித்தல்* [Retribution] *(6:1-8), (2) பதில் செயல்* [Response] *(6:9-17) மற்றும் (3) மீட்பு* [Redemption] *(7:1-17) ஆகியவற்றில் கவனம் செலுத்தினார்.*

---

*குறிப்புகள்*

*[1]''சபை என்ற இராணுவசேனை'' என்ற சொற்றொடரானது, மாம்சப் பிரகாரமான யுத்தத்தையல்ல, ஆனால் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறிப்பிடுகிறது. [2]வெளிப்படுத்தின விசேஷம் 7:9-13 வசனப் பகுதியானது பரலோகத்தின் சித்தரிப்பாக உள்ளது என்பதைச் சில எழுத்தாளர்கள் நம்புவதில்லை. இந்த நிலைப்பாட்டின் தொகுப்புரையொன்றை,* Homer Hailey, *Revelation*: *An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979) *என்ற புத்தகத்தின் பக்கம் 213ல் காணவும். இவ்வசனப் பகுதியானது பரலோகத்தைச் சித்தரிக்காவிட்டாலும், இது குறைந்தபட்சம், பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் பற்றிய ஒரு முன்சுவையைக் கொடுக்கிறது என்பதைப் பெரும்பாலானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.* [3]Albertus Pieters, *Studies in the Revelation of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 125. [4]Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 171. [5]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 37. [6]KJV வேதாகமத்தில், "which no *man* could number" *என்றுள்ளது. மனிதர் எவரும் இந்தக் கூட்டத்தில் இருந்தவர்களை எண்ண முடியாதிருந்தது, ஆனால் தேவனால் எண்ண முடிந்திருந்தது. [7]இந்த இரண்டாம் பகுதியானது ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகத்தைச் சுற்றிச் சுழலுகிறது (4:1-8:5). "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "நாம் ஜெயம்கொண்டோம், தேவனுக்கு நன்றி!" என்ற பாடத்தில் இந்தப் புத்தகத்தின் வரைக்குறிப்பையும் மேற்கண்ணோட்டத்தையும் காணவும். [8]"அடிப்படையில்" என்ற வார்த்தையானது இந்தக் கூற்றைத் தகுதிப்படுத்த அவசியமானதாக உள்ளது ஏனென்றால் ஞானஸ்நானப்படுத்தப்படும்போது முத்திரையிடப்படுதல் என்பது (முந்திய பாடத்தைக் காணவும்) ஒருவர் "மரணபரியந்தம் உண்மையாய்" (2:10) இருப்பார் என்பதை உத்தரவாதப்படுத்துவதில்லை. [9]இவ்விரு கூட்டங்களுக்கும் இடையில் உள்ள மற்ற வேறுபாடுகள் சிலவேளைகளில் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு குழுவினர் பூமியில் இருக்கையில் இன்னொரு குழுவினர் பரலோகத்தில் இருக்கின்றனர் என்ற உண்மையானது பொதுவாக, நேர்மாறின் பாகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அந்த வேறுபாடு இந்தப் பாடத்தின் இன்னொரு இடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. [10]சிலர், முத்திரையிடப்பட்டு இருந்தவர்களை யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கும் திரளான கூட்டத்தாரை, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில் ஏற்கனவே மரித்திருந்த கிறிஸ்தவர்களுக்கும் மட்டுப்படுத்துகின்றனர். இவர்கள் நிச்சயமாகவே தரிசனத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பார்கள், ஆனால் இந்த அடையாளத்துவமானது அதைக்காட்டிலும் அதிகம் விரிவானதாக காணப்படுகிறது.*

*[11]நான்கு சொற்றொடர்களின் பயன்பாடு, மீட்கப்பட்டவர்கள் பூமியெங்கிலும் இருந்து வந்தவர்கள் என்ற கருத்தை மறு உறுதிப்படுத்துகிறது ("நான்கு" என்பது மனிதத்துவத்தின் எண்ணாக உள்ளது). ''கோத்திரங்கள்,'' ''பாஷைக்காரர்,''*

"ஜனங்கள்," மற்றும் "ஜாதிகள்" என்ற சொற்றொடர்களின் விளக்கத்தை, இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள ''ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராய் இருக்கின்றார்'' என்ற பாடத்தில் காணவும். [12]''ஆவிகளின் நகரம்'' என்பது (சுரங்கத்தில் இருந்து விலையுயர்ந்த உலோகங்கள் தோண்டி எடுக்கப்பட்டதினால்) ஒருகாலத்தில் செழிப்புற்று இருந்து, பின்பு மீதியாய் இருக்கும் கைவிடப்பட்ட நகரமாயிருக்கிறது. அங்கு இப்போது ஒருவரும் வசிப்பதில்லை, கட்டிடங்கள் விழுந்து கிடக்கின்றன. [13]John Wick Bowman, *The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955), 51. வெள்ளை அங்கிகள் பற்றிய தனிச்சிறப்பின் மற்ற கலந்துரையாடலுக்கு, இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள, ''நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!" என்ற பாடத்தில் 6:11ன் மீதான விளக்கங்களைக் காணவும். [14]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 182. [15]Mounce, 172. [16]ஏழு மடங்கு துதியானது இரண்டு "ஆமென்"களுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது. [17]தேவனுக்கு செலுத்தப்படும் ஏழு மடங்கு மரியாதையானது 5:12ல் ஆட்டுக்குட்டியானவருக்கு செலுத்தப்படுவதுபோன்றே உள்ளது. 5:12 மற்றும் 7:12 ஆகியவற்றிற்கு இடையில் மூன்று வேறுபாடுகள் நிலவுகின்றன: (1) வரிசைமுறை வேறுபட்டுள்ளது; (2) 7:12ல் "ஐசுவரியம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "நன்றிசெலுத்துதல்" ("ஸ்தோத்திரம்") என்றுள்ளது; (3) மூலவசனத்தில், 7:12 வசனத்தில் ஏழு சொற்றொடர்கள் ஒவ்வொன்றிற்கும் முன்பாக திட்டவட்ட சுட்டுச்சொல் (the) வருகிறது. அதே வேளையில் 5:12ல் அது வருவதில்லை. ஒவ்வொரு சொற்றொடரின் முன்பாகவும் தோன்றுகிற திட்டவட்ட சுட்டுச்சொல் தனிச்சிறப்புடையது. [18]Hailey, 207. [19]யோவான் 7:2, 37-39ஐக் காணவும். தண்ணீர்ச் சடங்கு செய்யப்படும் "பண்டிகையின் பிரதான நாளின்"போது, இயேசு "ஜீவதண்ணீர்" பற்றிப் பேசினார் (வசனம் 38) மற்றும் அவர், "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்" என்று சத்தமிட்டுக்கூறினார் (வசனம் 37). [20]வசனங்கள் 13முதல் 17வரையுள்ள பகுதியில் கேள்விகள் மற்றும் பதில்கள் ஆகியவற்றின் இடமாற்றமானது பரலோகத்தின் அற்புதங்களை நோக்கி கவனம் செலுத்தும்படி அழைக்கும் அழைப்பிற்கான நாடகத்துவமான கருவியாக உள்ளது; இது எதையாவது ''நிரூபிப்பதற்கு'' அழுத்தப்படக் கூடாது. சிலர் இதை, அப்போஸ்தலரான யோவான் இந்தப் புத்தகத்தை எழுதவில்லை என்று நிரூபிக்க முயற்சிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர் ("அப்போஸ்தலரான யோவான், அந்தக் கூட்டத்தில் இருந்த மக்களில் சிலரை அறிந்திருப்பார்''). சிலர் இதை, அந்தக் கூட்டத்தில் கிறிஸ்தவர்கள் இருக்கவில்லை என்று நிரூபிக்கப் பயன்படுத்துகின்றனர் ("அந்தக் கூட்டத்தார் கிறிஸ்தவர்களாய் இருந்திருந்தால், அவர்கள் யாரென்று அப்போஸ்தலரான யோவான் அறிந்திருப்பாரே"). இப்படிப்பட்ட வாதமானது, இறைவெளிப்பாட்டு மொழிநடையின் அடையாளத்துவ மற்றும் நாடகத்துவ இயல்பைப் புறக்கணிக்கிறது.

[21]ஒருவேளை மூப்பர்களில் ஒருவர் யோவானை அணுகினார் என்ற உண்மையானது, குறிப்பிடத்தக்கதல்ல. (இது இதற்கு முன் 5:5ல் ஒருமுறை நடைபெற்றிருந்தது.) வெளிப்படுத்தின விசேஷம் என்ற நாடகத்தில், மேடையில் உள்ள எந்த ஒரு நடிகரும், அந்தக் காட்சியில் அவசியமானல் பேசும் பணிப்பொறுப்பு ஒன்றைக் கொண்டிருக்கலாம். இந்த உண்மையில் ஏதேனும் தனிச்சிறப்பு இருக்கும் என்றால், அது அந்த மூப்பர்கள் (மீட்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள்) மீட்பின் கருத்தைப் பற்றிப் பேசத் தகுதிபெற்றிருப்பார்கள். (இந்தப் புத்தகத்தின் முந்திய பாடங்களில் ஒன்றான

“கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்” என்ற பாடத்தில், இருபத்து நான்கு மூப்பர்களைப் பற்றிய குறிப்புகளைக் காணவும்.) [22](நாம் அறிந்த வரையில்) யோவான் கேள்வியெதையும் உரத்து எழுப்பியிருந்திராதபடியால், ‘‘பதில் அளித்தார்’’ என்ற சொற்றொடரானது அனேகமாக, அந்த அப்போஸ்தலர் தமது சிந்தையில் கேட்டிருந்த அல்லது தமது முகத்தில் காண்பித்திருந்த கேள்வி ஒன்றிற்கு மூப்பர் பதில் அளித்தார் அல்லது மூப்பர் கேள்வி ஒன்றை எதிர்பார்த்து மாத்திரம் இருந்தார் என்று அர்த்தப்படலாம். [23]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 38. [24]‘‘ஆண்டவர்’’ என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (*kurios*) வழக்கமாக, தேவனுக்கும் இயேசுவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் இது அவ்வப்போது மனிதர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது (மத்தேயு 18:25-34; 25:11; 1 பேதுரு 3:6 ஆகிய வசனங்களைக் காணவும்). [25]இது, “who *are* coming out of” (“ல் இருந்து வெளியே வந்த”) என்று மொழிபெயர்க்கப்பட முடியும், இது இந்தக் காட்சியானது நியாயத்தீர்ப்பின் கடைசிநாளுக்கு முன்நடக்கிறது என்று சுட்டிக்காண்பிக்கலாம். இதற்கு மறுபுறத்தில், இது எதிர்காலத்தைப் பற்றிப் பேசுவதற்கு நிகழ்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தும் பேச்சு உருவகமாக இவ்விடத்தில் உள்ளது என்று பலர் நம்புகின்றனர். NIV மற்றும் RSV வேதாகமங்களில் இச்சொற்றொடர் “*have* come out of” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [26]ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள், கர்த்தர் திரும்பவும் வந்து தமது (நேரடி அர்த்தத்திலான) ஆயிரம் ஆண்டு அரசாட்சியைத் தொடங்குவதற்கு முன்பு, ஏழு ஆண்டு காலத்திற்கு விசுவாசிகள் பூமிக்கு மேலே உலாவிக்கொண்டிருப்பார்கள் (‘‘பரவசநிலை’’) மற்றும் அந்த வேளையில் பூமியின்மீது மாபெரும் உபத்திரவம் இருக்கும் (“உபத்திரவம்”) என்ற தவறான கருத்தைப் பற்றிக்கொண்டுள்ளனர். [27]D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, Publishers, 1961), 139. [28]Edward A. McDowell, *The Meaning and Message of the Book of Revelation* (Nashville: Broadman Press, 1951), 99. [29]Quoted by Myer Pearlman in *Windows into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield, Mo.: Gospel Publishing House, 1941), 77. [30]இரண்டாவது “இவர்கள்” என்பது “have made” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வினைச் சொல்லின் புரிந்துகொள்ளப்பட்ட பாகமாக உள்ளது.

[31]இவ்வசனம் “இரவும் பகலும்” என்பது பற்றிப் பேசுகிறபோது, 21:25அ “அங்கே இராக்காலம் இராது” என்று கூறுகிற உண்மை பற்றிச் சிலர் கவலைகொண்டுள்ளனர். (1) சீர்த்தன்மையல்ல, ஆனால் உருவகம் என்பதே வெளி.புத்தகத்தில் முக்கியமானதாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (2) ‘‘இரவும் பகலும்’’ என்பது, ‘‘இடைவிடாமல், எப்போதும்’’ என்பதைக் கூறுவதற்கான மரபுசார்ந்த வழிமுறையாக உள்ளது. [32]இவ்வசனம் ஆலயத்தைப் பற்றிப் பேசுகையில், 21:22அ “ஆலயத்தை நான் காணவில்லை” என்று கூறுகிற உண்மை பற்றிச் சிலர் கவலை கொண்டுள்ளனர். (1) மீண்டுமாக, சீர்த்தன்மையல்ல, ஆனால் உருவகமே முக்கியமானதாக உள்ளது. (2) பரலோகத்தில் ஆலயம் என்று அழைக்கப்படும் கட்டிடம் எதுவும் இராது; மாறாக, பரலோகம் முழுவதும் தேவனுடைய பரிசுத்த ஸ்தலமாக (ஆலயமாக) இருக்கும், அங்கே அவர் ஆராதிக்கப்படுவார். [33]NASB வேதாகமத்தில் “serve” (“சேவித்தல்”) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ‘‘ஆராதனை’’ என்பதற்கு, அதிலும் விசேஷமாக, பொதுவான ஆராதனை என்பதற்கு உரிய வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது. இது நம்மைத் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணித்தலையும் குறிப்பிடக்கூடும்

*(இவ்வார்த்தை ரோமர் 12:1ல் ஒருவர் தமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தலைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது).* [34]*இந்த நிகழ்ச்சியானது ஜட்ஸோனியா கிறிஸ்துவின் சபையின் பிரசங்கியாரான கிளென் பேஸ் அவர்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டது.* [35]Rudyard Kipling, "When Earth's Last Picture Is Painted," *Rudyard Kipling's Verse* (Garden City, N. Y.: Doubleday and Company, 1940), 226. [36]KJV *வேதாகமத்தில்* "shall dwell among them" *என்றுள்ளது. பரலோகத்தில் தேவன் தமது மக்களின் நடுவில் வாசமாயிருப்பார், ஆனால் கிரேக்க வசனத்தில், அதைக் காட்டிலும் அதிகமான அர்த்தம் உள்ளடங்கியிருக்கிறது. மூலவசனமானது நேரடியான அர்த்தத்தில், அவர் "அவர்கள்மீது [தமது] கூடாரத்தை விரிப்பார்" என்றுள்ளது.* [37]*7:16ஐ, யூதர்கள் அடிமைத்தனத்தில் இருந்து தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பியதைச் சித்தரிக்கிற ஏசாயா 49:10உடன் ஒப்பிடவும்.* [38]Mounce, 176. [39]Pearlman, 78. [40]*7:17இ யை, ஏசாயா 25:8; 66:13 உடன் ஒப்பிடவும்.*

[41]Baldinger, 38-39. [42]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 36. [43]KJV வேதாகமத்தில் "feed them" [*''அவர்களைப் போஷிப்பார்''*] *என்றுள்ளது, ஆனால் இதன் வினைச்சொல்லானது ''மேய்ப்பரைப்போல் அவர்களைப் பராமரிப்பார்'' என்பதற்கானதாக உள்ளது. இது போஷித்தலை உள்ளடக்குகிறது, ஆனால் அதைக் காட்டிலும் அதிகமானதும் உள்ளடங்குகிறது.* [44]*ஆட்டுக்குட்டியானவர், ஆடுகளை வழிநடத்துதல் என்ற கருத்து தொடக்ககால வாசகர்களுக்கு அவ்வளவு புதுமையானதாக இருந்திராது. பெரும்பாலான மந்தைகளில் "வழிநடத்தும் ஆடு" ஒன்றிருந்தது. கால்நடைகள் பற்றி நன்கு அறிந்தவர்கள், வழக்கமாகக் கழுத்தில் மணியுடன் உள்ள "வழிநடத்தும் பசுமாடு" ஒன்றைக் கண்டிருப்பார்கள்.* [45]*நல்ல மேய்ப்பர் தமது மக்களுக்குச் செய்கின்ற மற்றும் செய்யவிருக்கின்ற பிற விஷயங்களுக்கு சங்கீதம் 23ஐயும் ஏசாயா 40:11ஐயும் காணவும்.* [46]Palmer, 184. [47]Corrie ten Boom, *In My Father's House* (Old Tappan, N. J.: Fleming H. Revell Co., 1976), 192. [48]Roper, 175-86. [49]Pearlman, 77. [50]Baldinger, 38.

[51]Warren Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 586-91.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *இந்தப் பாடத்தை எழுதியவரின் கூற்றுப்படி, முத்திரையிடப்பட்டவர்களைக் கொண்டு குறிப்பிடப்பட்டவர்கள் யார் (7:1-8)? எண்ணமுடியாத மக்கள்திரளைக் கொண்டு குறிப்பிடப்பட்டவர்கள் யார் (7:9-17)?*
2. *முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு 7:9-17ன் முழுமையான செய்தியாக இருந்தது எது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இன்றைய நாட்களில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு இதன் முழுமையான செய்தியாக இருக்கிறது எது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?*
3. *திரளான மக்கள் கூட்டத்தாரால் அணியப்பட்டிருந்த வெள்ளை அங்கிகளின் தனிச்சிறப்பு என்ன?*

4. குருத்தோலைகளின் தனிச்சிறப்பு என்ன?
5. புதிய ஏற்பாட்டில், "இரட்சிப்பு" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ள வேறுபட்ட மூன்று வழிமுறைகள் யாவை?
6. விளக்கவுரையாளர்கள் பலரின் கூற்றுப்படி, 7:9-17ன் பல விபரங்கள் யூதர்களின் எந்தப் பண்டிகையுடன் தொடர்பு கொண்டுள்ளன? அந்தப் பண்டிகையைப் பற்றி உங்களால் முடிந்த ஒவ்வொன்றையும் வாசித்து, அந்தப் பண்டிகையின்போது நடந்தவற்றைக் கலந்துரையாடத் தயாராகவும்.
7. யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள் "மகா உபத்திரவம்" பற்றி வாசித்தபோது, அந்தச் சொற்றொடர் அவர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன?
8. இயேசுவின் இரத்தத்தில், நாம் "நமது அங்கிகளை" எவ்வாறு தோய்க்க முடியும்?
9. பரலோகம் என்பது செயல்முனைப்பற்ற இடமாக உள்ளதா? நாம் பரலோகத்தில் செய்பவை பற்றி நீங்கள் நினைப்பது என்ன?
10. 7:16, 17ல் உங்களுக்கு மிகவும் விலையேறப் பெற்றதாக உள்ள வாக்குத்தத்தம் எது? ஏன்?



அரியணையைச் சுற்றிலும் மக்கள்திரள் *(7:9, 10)*